மது போதையில்

பெண்கள் மீது தாக்குதல்

3 பேர் கைது

அந்தியூர், ஜூன் 12: அந்தியூர் அருகே மதுபோதையில் பெண்களை தாக்கிய 3 வாலிபர்களை போலீசார் கைது செய்தனர்.

அந்தியூர் அடுத்த ஜெ.ஜெ.நகர் அருகிலுள்ள மைதானத்தில் கடந்த 4 நாட்களுக்கு முன் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து மது குடித்து விட்டு ரகளையில் ஈடுபடுவதாக அந்தியூர் போலீசாருக்கு அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் புகார் அளித்தனர். இதன் பேரில் அங்கு சென்ற போலீசார் குடித்துவிட்டு கும்மாளம் அடித்து கொண்டிருந்த வாலிபர்களை மிரட்டி அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு அதே பகுதியை சேர்ந்த சபியுல்லா மகன் அபுபக்கர் சித்திக் (19), பொன்னையன் மகன் அரவிந்த் (26), ரபீக் மகன் அப்துல் (20) மற்றும் 16 வயது சிறுவன் ஆகியோர் மதுபோதையில் ரகளையில் ஈடுபடுவதாக போலீசாருக்கு தகவல் கொடுத்தாக கூறி பொதுமக்களிடம் தகராறில் ஈடுபட்டனர். அப்போது, அதே பகுதியை சேர்ந்த பாரதி (30), பாமா (25) என்ற 2 பெண்களை தாக்கி உள்ளனர். இது குறித்து இருவரும் அந்தியூர் போலீசில் புகார் அளித்தனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் அபுபக்கர் சித்திக், அரவிந்த், அப்துல் ஆகியோரை போலீசார் கைது செய்து பவானி கிளைச்சிறையில் அடைத்தனர். மேலும், சிறுவனுக்கு அறிவுரை கூறி வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

செல்போன் பறித்த 4 பேர் கைது

ஈரோடு, ஜூன் 12: பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர் சர்வன் குமார் (25). இவர் ஈரோட்டில் தங்கி கட்டிட தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சூரம்பட்டி நால் ரோட்டில் உள்ள ஒரு ஏடிஎம்மில் பணத்தை எடுத்துக் கொண்டு ஈ.வி.என் ரோட்டில் சர்வன்குமார் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அப்போது, அந்த வழியாக வந்த 3 வாலிபர்கள் சர்வன் குமாரை தாக்கி அவரிடம் இருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பி ஓடினர். இந்த தாக்குதலில் காயமடைந்த சர்வன் குமார் ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் கொடுத்த புகாரின் பேரில், ஈரோடு டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்து மரப்பாலம் பிளாக்குயவன் திட்டு பகுதியைச் சேர்ந்த கிருஷ்ண மூர்த்தி (25), பெரியார் நகர் அசோகபுரியை சேர்ந்த வசந்த் (23), ஸ்டோனி பிரிட்ஜ் பகுதி சேர்ந்த காளியப்பன் (24) மற்றும் நவீன்குமார் (26) ஆகியோரை கைது செய்தனர்.

மின்மோட்டாரில்

குடிநீர் உறிஞ்சினால் இணைப்பு துண்டிப்பு

சத்தியமங்கலம், ஜூன் 12: சத்தியமங்கலம் நகராட்சி கமிஷனர் வெங்கடேஸ்வரன் கூறியதாவது: சத்தியமங்கலம் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் வசிக்கும் பொது மக்களுக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஒரு சில பகுதிகளில் குடிநீர் இணைப்பில் சட்ட விரோதமாக மின் மோட்டார் பொருத்தி அதிகப்படியான குடிநீர் உறிஞ்சப்படுவதால் சீராக குடிநீர் விநியோகம் செய்ய இயலுவதில்லை. மோட்டார் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டால் மோட்டார் பறிமுதல் செய்யப்படுவதோடு, ரூ.20 ஆயிரம் அபராதம் விதித்து குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். மீண்டும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட இயலாது.

மேலும் ஒரு சில பகுதிகளில் பொது குடிநீர் குழாய்களில் ரப்பர் குழாய் பொருத்தி குடிநீர் எடுக்கப்படுகிறது. அவ்வாறு குடிநீர் எடுக்கும் ரப்பர் குழாய்கள் பறிமுதல் செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

ரூ.7.13 லட்சத்துக்கு நிலக்கடலைக்காய் ஏலம்

கொடுமுடி, ஜூன் 12: சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலைக்காய் ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏலத்தில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 288 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 66.66 காசுக்கும், அதிகபட்ச விலையாக 86.80 காசுக்கும், சராசரி விலையாக 80.36 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் 9,037 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காய் 7 லட்சத்து 13 ஆயிரத்து 520 ரூபாய்க்கு விற்பனையானது.

கழிவுநீரால் கட்டுமான பணிகள் தாமதம்

ஈரோடு கோணவாய்க்கால் அருகே காலிங்கராயன் வாய்க்கால் சீரமைப்பு பணிக்கு இடையூறாக கழிவுநீர் தொடர்ந்து வருவதால் கட்டுமான பணிகள் மேலும் தாமதமாகிறது.

மாற்று இடங்களில் வண்டல் மண் கொட்டிய லாரிகள்

விளக்க கடிதம் கொடுக்காததால் 84 லாரிகள் மண் எடுக்க அனுமதி மறுப்பு

வருவாய் துறை திட்டவட்டம்

சத்தியமங்கலம், ஜூன் 12: பவானிசாகர் அணையில் படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக் கொள்ள அரசு உத்தரவிட்ட நிலையில் வண்டல் மண் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கு இடையே கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு வண்டல் மண் எடுத்துச் சென்ற லாரிகள் மண் எடுத்துச் செல்ல ஆவணங்களில் சமர்ப்பித்த சர்வே எண்களில் உள்ள விவசாய தோட்டங்களில் கொட்டாமல் மாற்று இடங்களில் கொட்டியதை அறிந்த வருவாய் துறையினர் 84 லாரிகளுக்கு மண் எடுக்க தடை விதித்தனர். மற்ற லாரிகள் மண் எடுக்க எந்த தடையும் இல்லை என தெரிவித்ததால் நேற்று வழக்கம்போல் வண்டல் மண் எடுக்கும் பணி நடைபெற்றது.

இந்நிலையில் தடை விதிக்கப்பட்ட 84 லாரிகளின் உரிமையாளர்கள் வண்டல் மண்ணை மாற்று இடத்தில் கொட்டியதற்கான விளக்க கடிதம் கொடுத்தால் அந்த லாரிகளுக்கும் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்கப்படும் என வருவாய்த்துறையினர் தெரிவித்த நிலையில், நேற்று காராச்சிக்கொரை சோதனை சாவடிக்கு சென்ற லாரிகளின் உரிமையாளர்கள் அதற்கான விளக்கக் கடிதத்தை வருவாய்த்துறையிடம் சமர்ப்பிக்காததால் லாரிகளை மண் எடுக்க செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் நேற்று மதியம் வரை சோதனை சாவடி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரிகள் திரும்பி சென்றன.

இது குறித்து வருவாய் துறையினர் கூறியதாவது: விவசாயிகள் இலவசமாக வண்டல் மண் எடுத்துக் கொள்ள நிலத்தின் சர்வே எண் உள்ளிட்ட ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெறுகிறார்கள். இந்த அனுமதியை பயன்படுத்தி லாரி மூலம் மண் எடுத்து செல்பவர்கள் அனுமதி பெற்ற விவசாயத் தோட்டத்தில் கொட்டாமல் மாற்றுப் பகுதிகளில் கொட்டியதால் 84 லாரிகளுக்கு மட்டும் தடைவிதித்தோம். மற்ற லாரிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் விவசாயிகள் வழக்கம் போல் வண்டல் மண் எடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

அபாயகரமான நிலையில் இறைச்சி அறுவை கூடம்

ஈரோடு மரப்பாலத்தில் இறைச்சி அறுவை கூடத்தின் கட்டிடம் சிதலமடைந்து அபாயகரமான நிலையில் உள்ளது.

510 கிலோ புகையிலை பொருட்கள் அழிப்பு

ஈரோடு, ஜூன் 12: ஈரோட்டில் பறிமுதல் செய்யப்பட்ட 510 கிலோ குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் குப்பை கிடங்கில் சேதப்படுத்தி குழிதோண்டி புதைத்து அழிக்கப்பட்டன.

ஈரோடு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட குட்கா, பான்பராக், கூல்லிப், ஹான்ஸ் போன்ற புகையிலைப் பொருட்களை போலீசார் மற்றும் உணவு பாதுகாப்பு துறையினர், சுகாதார அலுவலர்கள் பறிமுதல் செய்து, அதனை விற்பனை செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து அபராதம் விதித்து வருகின்றனர். இதில், ஈரோடு டவுன் போலீசார் மற்றும் உணவு பாதுகாப்பு துறையினர் ரயில்வே போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்ட அரசால் தடை செய்யப்பட்ட 510 கிலோ குட்கா போன்ற புகையிலை பொருட்கள் நேற்று கலெக்டர் உத்தரவின்படி, ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பைக் கிடங்கில் 10 அடி ஆழம் குழிதோண்டி புதைத்து முற்றிலும் அழிக்கப்பட்டன.

ஆசிரியர்கள் பணி ஓய்வு பெற்றதால்

வேளாண் பாடப்பிரிவையே மூடுவதா?

இந்திய மாணவர் சங்கம் கண்டனம்

ஈரோடு, ஜூன் 12: பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடப்பாண்டில் வேளாண்மை பாடப்பிரிவு நீக்கப்பட்டுள்ளதால் அதற்கு இந்திய மாணவர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தில் இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று மனு அளித்தனர். அம்மனுவில் மாணவர்கள் கூறியிருப்பதாவது: பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கடந்த பல ஆண்டுகளாக வேளாண்மை பாடப்பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு விருதுகளும் பெறப்பட்டுள்ளது. வேளாண்மையை வாழ்வாதாரமாகக் கொண்ட இப்பகுதியில் உள்ள ஏழை, எளிய மாணவர்களுக்கு பாடப்பிரிவு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்து வருகிறது.

இந்நிலையில், தற்போது இப்பாடப்பிரிவில் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் பணி ஓய்வு பெற்று விட்டனர் என்ற காரணத்தைக் காட்டி, நடப்பு கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நிறுத்தப்பட்டுள்ளது. இது ஏழை, எளிய மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பையும், எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஆசிரியர்கள் ஓய்வுபெறுவது என்பது நிர்வாக ரீதியான நடைமுறையாகும். அதற்காக ஒரு பாடப்பிரிவையே மூடுவது என்பது அரசு பள்ளிகளை வலுப்படுத்தும் கொள்கைக்கு எதிரானது. காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்காமல், வேளாண்மை பாடப்பிரிவு மாணவர் சேர்க்கையை நிராகரிப்பது கண்டிக்கத்தக்கது.

எனவே, பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், நடப்பாண்டிற்கான வேளாண்மை பாடப்பிரிவு மாணவர் சேர்க்கையை உடனடியாக தொடங்க வேண்டும். வேளாண்மை பாடப்பிரிவிற்கு புதிய ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். விவசாயம் சார்ந்த கல்வியை ஊக்குவிக்க வேண்டிய சூழலில் இருக்கும் பாடப்பிரிவை முடக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

வாகனங்கள் மீது கல்வீசி தாக்க முயன்ற வாலிபரால் பரபரப்பு

அந்தியூர், ஜூன் 12: அந்தியூரில் வாகனங்கள் மீது கல்வீசி தாக்க முயன்ற வாலிபரால் பரபரப்பு ஏற்பட்டது.

அந்தியூர் தவிட்டுப்பாளையம் ஒன்றிய அலுவலகம் அருகில் வசிக்கும் சண்முகம் மகன் கோகுல் (25). இவர் நேற்று முன்தினம் ஒன்றிய அலுவலத்துக்கு முன், நடு ரோட்டில் நின்று கொண்டு அவ்வழியாக வரும் வாகனங்களை வழிமறித்து பயங்கரமாக சத்தமிட்டு கொண்டிருந்தார். இதைக் கவனித்த அப்பகுதி பொதுமக்கள் அச்சத்தில் வாலிபரை மடக்கி பிடிக்க முயன்று முயலவில்லை. இதனைத் தொடர்ந்து, அவர் அங்கு கிடந்த கற்களை எடுத்து அவ்வழியாக வரும் வாகனங்களின் கண்ணாடி மீது வீசுவதுபோல மிரட்டினார். இதனால், அந்த வழியாக சென்ற வாகனங்களின் டிரைவர்கள், என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு நிமிடம் நின்று மெதுவாக சென்றனர்.

அப்போது, அந்தியூரில் இருந்து சரக்கு வாகனம் ஓட்டி வந்த மைக்கேல்பாளையத்தை சேர்ந்த டேவிட் (24) என்பவரை வழிமறித்து கல்லைக்கொண்டு கண்ணாடியை உடைக்க சென்றார். பயந்துபோன டிரைவர், வாகனத்தை வலது பக்கம் திருப்பி ரோட்டின் குறுக்கே நிறுத்தினார். கோபத்தில் கீழே இறங்கிய டிரைவர் வாலிபரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்பகுதியில் 50க்கும் மேற்பட்டோர் கூடினர்.

மீண்டும் யாரும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அந்த வாலிபர் ரகளையில் ஈடுபட்டார். அப்போது அங்கு வந்த அவரது தாய், ‘மனநலம் சரியில்லாதவன்’ எனக்கூறி பொதுமக்களிடம் கெஞ்சி மகனை அழைத்து சென்றார். தொடர்ந்து வாகனத்தை நடுரோட்டில் நிறுத்தியதால், தவிட்டுப்பாளையம் பூக்கடை கார்னர் வரை போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்த அந்தியூர் டிராபிக் போலீஸ் எஸ்எஸ்ஐ மெய்யழகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து வாகனங்களை ஒழுங்குபடுத்தினர். சரக்கு வாகனத்தை நிறுத்தி ரகளையில் ஈடுபட்ட தகவல், அந்தியூர் மினி ஆட்டோ ஸ்டாண்ட் டிரைவர்களுக்கு பரவியது. அங்கு வந்த 20க்கும் மேற்பட்ட டிரைவர்கள் நடுரோட்டில் நிறுத்திய வாகனத்தை எடுக்க முடியாது எனக்கூறி, அதே பகுதியில் இருந்த வாலிபரின் வீட்டுக்கு சென்று பிரச்னையில் ஈடுபட்டனர். பின்னர் வாலிபரை வீட்டுக்குள் பூட்டி வைத்து தாய், 10 நிமிடத்துக்கும் மேலாக கெஞ்சியதால், அங்கிருந்து டிரைவர்கள் கிளம்பி சென்றனர். இதன்பிறகே நடுரோட்டில் நிறுத்தியிருந்த சரக்கு வாகனத்தை டிரைவர் எடுத்துச் சென்றனர்.

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி

கோபி அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கோபி, ஜூன் 12: தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பெற்றுள்ள பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி குருமந்தூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டமன்ற தேர்தலின்போது, விவசாயிகள் பெற்ற பயிர் கடன் தள்ளுபடி என்ற வாக்குறுதியை அளித்த தவெக அரசு வெற்றிபெற்ற நிலையில் விவசாயிகளின் பயிர் கடன் தள்ளுபடி அறிவிப்பு விவசாயிகளிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்ற பயிர் கடன்களை எவ்வித நிபந்தனையும் இல்லாமல் முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக கோபி அருகே குருமந்தூரில் உள்ள ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முன்பு 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் திரண்டு பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, வரும் நிதி நிலை அறிக்கையில் பயிர்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி முழக்கம் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் ஆயிபாளையம், குருமந்தூர், நடுப்பாளையம், காராப்பாடி, பழனிக்கவுண்டன் பாளையம், கரட்டுப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

புகை மூட்டத்தால் விடிய, விடிய மக்கள் அவதி

சென்னிமலை, ஜூன் 12: சென்னிமலை அருகே கீழ்பவானி வாய்க்காலுக்குள் கிடந்த குப்பையில் வைக்கப்பட்ட தீயால் விடிய, விடிய புகை மூட்டம் ஏற்பட்டதால் பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

புங்கம்பாடி பகுதியில் செல்லும் கீழ்பவானி வாய்க்காலில் கிடந்த குப்பைகளில் விடிய, விடிய தீ எரிந்து கொண்டிருந்தது.

சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட புங்கம்பாடி பகுதியில் ரயில் பாதையின் குறுக்கே கீழ்பவானி வாய்க்கால் செல்கிறது. தற்போது, வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டதால் ரயில்வே பாலத்தின் அருகில் வாய்க்காலுக்குள் கிடந்த குப்பைகளில் நேற்று முன்தினம் மாலையில் யாரோ தீவைத்துள்ளனர். இந்த தீ மளமளவென பரவி அருகில் காய்ந்து கிடக்கும் சருகுகளிலும் பிடித்ததால் ஒரே புகை மூட்டமாக காணப்பட்டது.

விடிய, விடிய புகை மூட்டமாக இருந்ததால் காற்று காரணமாக புகை வெளியேறி அருகில் உள்ள புங்கம்பாடியில் வசிக்கும் ஊர் பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

ரயில்வே ஸ்டேஷனில்

டிக்கெட் பெற அலைக்கழிப்பதாக புகார்

ஈரோடு, ஜூன் 12: ரயில்வே ஸ்டேஷனில் முன்பதிவில்லா டிக்கெட் பெற பயணிகள் அலைக்கழிப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இது குறித்து தென்னக ரயில்வேயின் பொதுமேலாளருக்கு, ரயில்வேயின் முன்னாள் ஆலோசனைக் குழு உறுப்பினர் பாஷா அனுப்பிய கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

ரயில் பயணிகள் முன்பதிவில்லா ரயில் டிக்கெட்டுகளை செயலி மூலமாக மட்டுமே எடுக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும் ரயில்வே ஸ்டேஷனில் முன்பதிவில்லா டிக்கெட் பெற சென்றால் ரயில்வே பயணச்சீட்டு கவுண்டர்களில் உள்ள ரயில்வே ஊழியர்கள் டிக்கெட் வழங்குவதற்கு பதிலாக ‘ரயில் ஒன்’ செயலியை பதிவிறக்கம் செய்ய வற்புறுத்துகிறார்கள்.

இந்த செயலி மூலமாக டிக்கெட் எடுத்தால், 3 சதவீத தள்ளுபடி எனவும், ஆனால் டிக்கெட் கேன்சல் செய்ய முடியாது. பணம் திரும்ப கிடைக்காது. ஏற்கனவே ‘போன் பே’, ‘ஜிபே’ மூலம் டிக்கெட் வழங்கப்படும் எனவும், தற்சமயம் ரயில் ஒன் செயலி மூலம் டிக்கெட் வழங்குதல் போன்ற நடைமுறைகளை அமல்படுத்தி, ஏழை, எளிய நடுத்தர மக்களை சிரமத்திற்குள்ளாகி வருகிறது. எனவே, இதற்கு முன்பு இருந்ததை போல முன்பதிவில்லா டிக்கெட் நடைமுறையை அமல்படுத்திட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை அலுவலகம் ஈரோடு: 139, யுஆர்டி டவர், முதல் தளம், பெருந்துறை சாலை, ஈரோடு-638011.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வகையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/ கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நிலுவை வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/RERO/1023/1174169, சுமதி காசிராஜன் திரு./திருமதி. S லோகேஷ், கி.அ.: ஈரோடு	Rs. 23,96,121.67, 12/09/2024	கையக சுவாதீனம்	மனை எண்.79, பழைய S.F.No.95,96/B, புதிய மறு S.F.No.473/2, துணைப் பிரிவு மறு S.F.No.473/2A1A1A, பட்டா எண்.295, நெடுஞ்சாலை நகரம், புஞ்சைபழத்தொழுவு கிராமம், பெருந்துறை கிராமப் பஞ்சாயத்து, ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம், ஈரோடு, பெருந்துறை, தமிழ்நாடு, 336324.	Rs. 20,65,000	Rs. 2,06,500	16/07/2026	Rs. 10,000	25-06-2026, 11AM to 5PM	17-07-2026, 02Pm to 03PM	அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்டது போல எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பப்பத்துப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும். 4. மனை எண் 68, 3வது தளம், செக்டார் 44, குர்கான், ஹரியானா 122003 என்ற இடத்தில் அதன் கார்பரேட் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட் மின்–ஏலம் மூலம் விற்பனை நடத்துவதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். இணையதளம்: www.bankeauctions.com. சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிகளுக்கும் மேலும் அனைத்து பிற விசாரணைகளுக்கும் அல்லது பதிவுசெய்வதற்கும், நீங்கள் பிஎன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ நபர் ஸ்ரீசரண்,தொடர்பு எண். 9738931789/ கட்டணமில்லா எண்.1800 120 8800, மின்னஞ்சல் auction@pnbhousing.com காணவும் அல்லது www.pnbhousing.com– ஐ பார்க்கவும்.

இடம்: ஈரோடு நாள்: 12-06-2026

ஓம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்